Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 03　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　ஆவணி 02　　(18 - 08 - 1992)　　செவ்வாய்க்கிழமை　　ஓசை 182

## போதைவஸ்து தொடர்பாக மாணவர்களிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

போதைவஸ்து பாவனையை தடுக்கும் நோக்கத்துடன் மாணவர்களிடையே கட்டுரை ஓவியப்போட்டிகள் நடத்தப்பட விருக்கின்றன. பாடசாலைகள் அடுத்த தவணைக்காக ஆரம்பமானபின்னர் முதலில் பாடசாலை மட்டத்திலும், பின்னர் கோட்ட மட்டத்திலும் பின்னர் மாவட்ட மட்டத்திலும் போட்டிகள் நடத்தப்பட விருக்கின்றன. இந்தப் போட்டிகளுக்கான விபரங்கள், மற்றும் போட்டி நிபந்தனைகள்குறித்த சுற்று நிருபத்தை பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (24)

# யாழ். குடாநாட்டில் எந்நேரத்திலும் ராணுவ நடவடிக்கை தொடங்கலாம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

[கொழும்பு]

யாழ். குடாநாட்டில் எந்த நேரத்திலும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கலாம் எனவும், அதற்கான ஆயத்தங்கள் துரித கதியில் மேற் கொள்ளப்பட்டுவருவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாக்குதல்திட்டம் பற்றி தெரிவித்த பெயர்குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி தாக்குதல்எவ்வேளையில் எப்பகுதியில்இடம்பெறும் என்பதைக்கூற மறுத்து விட்டார்.

ஆனால் இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் தேவையான இராணுவத்தளபாடங்கள், ஆயுதங்கள் போன்றவை கடந்த இரண்டு தினங்களாக இரவிரவாக அனுராதபுரத்திலிருந்து பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்றுமுன் தினமும், நேற்றும் குடாநாட்டின் வான்பரப்பில் விமானப் படை விமானங்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கரையோரப் பகுதிகள் மீது சிறி. இராணுவம் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை 8.50 மணி தொடக்கம் மண்டைதீவில் உள்ள சிறிலங்கா படையினரின் காவலரண்களிலிருந்து யாழ்.கரையோரப்பகுதிகளை நோக்கி பலத்த துப்பாக்கிச் சூடு, கலிபர் தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டது. சில மணித்தியாலயங்களுக்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் இடையே நண்பகல் 11.40 மணியளவில் நகரை நோக்கி எறிகணைத்தாக்குதலும் நடாத்தப்பட்டது

இதேவேளை காரைநகரிலிருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கியும் கல்முனைப் பகுதியிலிருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (22)

### குமாரியில் தபால்கள்

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' கப்பல் மூலம் சுமார் 362 தபால் பொதிகள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்டிருக்கிறது.

இத்தபால் பொதிகள் பருத்தித்துறையில் இருந்து இன்று பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரபப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட இருக்கிறது.

### வீரச்சாவு

12-08-1992 அன்று தட்டுவன் கொட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.



கப்டன் சுபாஸ்கர்

### செஞ்சோலை இசைமாலை

செஞ்சோலை இசைமாலை நிகழ்ச்சி இன்று இரவு 8-30 மணியளவில் வல்வெட்டித்துறை நெடியகாட்டுப்பிள்ளையார் கோவிலில் நடைபெற உள்ளது.

## கண்ணிவெடி அகற்றமுயன்ற இரண்டு ராணுவம் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேற்றாத்தீவு என்னும் இடத்தில் கண்ணிவெடிகளைச் செயலிழக்கச் செய்வதில் ஈடுபட்டிருந்த இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும் ஒருவர் காயமடைந்ததாகவும் கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. நேற்றுக்காலை இச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

## கல்லெறியைக் கொண்டு நாட்டைக் கலக்க முடியாது

- பிரேமதாசா

[மாத்தறை]

தியாகிகளான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மேஜர் ஜெனரல் விமலரட்ண போன்றோரின் இறுதிக் கிரியைகளின் போது சில விஷமிகள் கல்லெறிந்த சம்பவம் அவர்களை அபகீர்திப்படுத்துவதற்கு ஒப்பானதாகும். என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கல்லெறிகளைக் கொண்டு நாட்டையே கலக்கி விடலாம் என நினைத்த எதிரணியினரின் முயற்சி பலம் இழந்து தோல்வியுற்றதை நாடு முழுவதும் கண்டு விட்டது.

இவ்வாறான சம்பவங்களை பொறுமையுடன் சமாளிக்கும் தன்மை யு.என்.பி. அரசையே சாரும் காடைத்தனத்திற்கும் குழப்பத்திற்கும் யு. என். பி. ஆட்சியில் இடமில்லை என்று தெரிவித்தார்.

### ரயில்வே ஊழியர் சம்பளம் கொள்ளை

## படையிலிருந்து ஓடியோர் வேலையென சந்தேகம்

(கொழும்பு)

இரத்மலானை ரயில்வே வேலைத்தளத்தில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற ஐம்பது லட்சம் ரூபாய் கொள்ளையின் சூத்திரதாரிகள் சதிநாசகாரர்களா அல்லது ஆயுதங்களுடன் இராணுவத்தை விட்டு ஓடிச் சென்றவர்களா என்பதைக் கண்டறிய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இரத்மலானை ரயில்வே ஊழியர்களின் சம்பளப் பணம் 50 லட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக எட்டுப்பேரிடம் இருந்து முக்கிய தகவல்களை பொலிசார் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

### வீதி விபத்தில் பெண் படுகாயம்

நாவலர் வீதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்ற லாண்ட்மாஸ்ரர் மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்மணி ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் வந்த கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த பரம்சோதி சண்முகசுந்தரம் (வயது 52) என்னும் பெண்மணியே படுகாயமடைந்தவராவார். இவரது இரு கால்களும் முறிந்த நிலையில் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### விடைத்தாள் திருத்தம் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விடைத்தாள்கள் திருத்தும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வட- கிழக்கு இணையாத தீர்வு; அர்த்தமற்ற முயற்சி

- தொண்டா

பேசும் மக்கள் வாழும் பிரதே

## அராலித்துறை கண்ணிவெடி; மிகப் புதுமையான சம்பவம்

- சிசில் தெரிவிப்பு

அராலித்துறையில் இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகளைப் பலிகொண்ட அமுக்க வெடி சம்பவம்

டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

என்றும் தளபதி தெரிவித்திருப்பதாகவும்,

(கொழும்பு)

''வடமாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் ஒரே அதிகாரப் பரவலாக்கத்தின் பிராந்தியமாக கருதாத எந்தவொரு அரசியல் தீர்வு முயற்சியும் அர்த்தமற்றது. தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாத அத்தகையதொரு தீர்வை முன்வைப்பதில் என்ன பயன்''?

இவ்வாறுஇலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமாகிய எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமாகும். இவற்றை இணைக்க வேண்டுமென்று கேடக வேண்டிய அவசியமில்லை. அவை இணைந்துதான் இருக்கின்றன இணைக்க வேண்டும் என்ற பேச்சுக்கு இடமில்லை.

இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையில் கூட வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தெரிவுக்குழுவின் தீர்வில் வட - கிழக்கு இணைப்பு இல்லையேல் தமிக்குழுக்களுடன் இ. தொ. கா. சேர்ந்து இணைப்பை வலியுறுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இணைப்பிற்கு சம்மதிப்பதானால்

## தனி மாகாண சபை முஸ்லிம்களுக்கு வேண்டும்

வடக்குக் கிழக்கில் உள்ள முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய தான முஸ்லிம் மகாண சபையை தமிழ்க் கட்சிகளும், அமைப்புகளும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் வட - கிழக்கு இணைப்பற்கு பூரண ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஒன்று புத்தளத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகவும், இக் கூடடத்தில் வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற ஆயிரத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## முஸ். காங்கிரஸ் நிபந்தனை தமிழ்க் குழுக்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்குத் தனி அமைப்புக் கோருவதான முஸ்லிம் காங்கிரசின் திட்டத்தை கொழும்பிலிருந்து இயங்கும் தமிழ்க்குழுக்கள் நிராகரிந்து விட்டதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை விதித்திருப்பது தமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாகவும் அக்குழுக்கள் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது

# எதிர்கால சந்ததியையும் அரசு கடனாளி ஆக்குகிறது

## - அமரசிறி தெரிவிப்பு

'இந்த நாட்டில் இன்று வாழ்கின்ற மக்களை மட்டுமன்றி எதிர்கால சந்ததியினரையே அரசாங்கம் கடன்காரர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறது மக்களை ஈடு வைத்தே வெளிநாட்டுக் கடன் பெறப்படுகிறது' என்று காலி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

அக்மீமனையில்இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

கம்உதாவ களியாட்டு நிகழ்ச்சிக்காக இன்று கோடிக்கணக்கான ரூபாய் விரயம் செய்யப்படுகிறது. 1991 இல் கம்புறுபிட்டிய கம்உதாவ களியாட்டத்திற்காகச் செலவிடப்பட்ட பணத்தினால் தென் மாகாணம் முழுவதையும் அபிவிருத்தி செய்திருக்கலாம். 1992 மொனராகலை கம்உதாவ களியாட்டத்திற்கு விரயம் செய்யப்பட்ட பணத்தினால் ஊவா மாகாணத்தையே அபிவிருத்தி செய்திருக்கலாம். மக்களின் பணம் வீணாக விரயம் செய்யப்படுகின்றது.

அரசாங்கம் கடன்பெற்றால் மக்கள்தான் அதனை அடைக்க வேண்டும். கடனை களியாட்டம் நடத்த விரையமாக்கும்போது வெளிநாட்டார் போடும்தாளத்திற்கொல்லாம் மக்கள் ஆடவேண்டியுள்ளது. என்றும் தனதுரையில் குறிப்பிட்டார்.

கப்டன் சுபாஸ்கர்



லெப் காளிதாஸ்



வீர வேங்கை அறிவுமணி

வீரச்சாவு அடைந்த கப்டன் சுபாஸ்கர் (சோமசுந்தரம் சக்திவேல், செம்மலை அலம்பில்) லெப்டினன்ட் காளிதாஸ் (காளி-வன்னியசிங்கம் சற்குணராஜா, 2 ஆம் வட்டாரம் குச்சவெளி, திருமலை) வீரவேங்கை அறிவுமணி (மைக்கல்-சுப்பிரமணியம் துஷ்யந்தன் கனால் வீதி மாதகல்) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

அமுக்க வெடி சம்பவம் குறித்து நேரில் விசாரணைகளை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா அச்சம்பவம் மிக புதுமையானதொன்று என்று தெரிவித்திருப்பதாக பாதுகாப்பு வட்படுகிறது.

அதிகாரிகள் கூடுதலாக அதிர்வினாலேயே தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் குண்டு வெடித்த இடம் மணல்பாங்கான இடம் எனவும் வழமைக்கு மாறாக சிறு குழியே குண்டு வெடிப்பினால் ஏற்பட்டிருக்கக் காணப்பட்டது திருப்பதாகவும்,

லெப். ஜெனரல் கொப்பேகடுவவுக்கு பிடரியிலும். பின்பக்க இடுப்பிலும் மாத்திரமே காயங்கள் ஏற்பட்டதாகவும் அமுக்கம் காரணமாக வெடிக்கும் அமுக்கக் குண்டே வெடித்துள்ளது என்றும் தளபதி கூறியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## தங்கம் கொண்டுவந்தவர் தாண்டிக்குளத்தில் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தங்கம் கொண்டுவந்த ஒருவர் தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்செழு வடக்கு ஊரெழுவைச் சேர்ந்த செல்லையா சிவகுமார் என்பவர் 15 பவுண் தங்கத்தை வடபகுதிக்கு கொண்டுவர முயன்றபோது இராணுவத்தினரால் கைது செய்யட்பட்டு வவுனியா இராணுவ முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை பொன்னுத்துரை புவனேஸ்வரி (சிவா நகர் நெடுங்கேணி) என்னும் பெண் மணி வவுனியா நகரம் சென்று திரும்பும்போது இராணுவத்தால் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளார்.

போராளிக்கு தகவல் கொடுத்தார் எனக்கூறியே இராணுவத்தினர் இவரைத் தாக்கியுள்ளனர்.

## ''குமாரி'' வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பல் பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 1000 மெற்றிக்தொன் அரிசி, 1600 மெற்றிக்தொன்மா, 500 மெற்றிக்தொன் சீனி மற்றும் மல்லி, ரின்மீன் ஆகியவை இக் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளது. அத்துடன் 60 பீப்பா மண்ணெண்ணை, 178 பீப்பா தேங்காயெண்ணை ஆகியனவும் எடுத்து வரப்பட்டிருக்கிறது.

(க)

## மைலந்தனைப் படுகொலை

# பெற்றோர் அரவணைப்பிற்கு ஏங்கும் குழந்தைகள்

(கொழும்பு)

புனானை மைலந்தனையில் நடைபெற்றபடுகொலைகளில் பெற்றோரை இழந்து காயங்களுடன் பொலனறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரு குழந்தைகள் தாயின் அரவணைப்பிற்காக ஏங்குகின்றனர் என்று அந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக் குழந்தைகளை கவனித்து வரும் இந்த டாக்டர் மேலும் கூறுகையில் ''மைலந்தனை கொலைகளைச் செய்தவர்கள் இவ்விரு பச்சிளம் குழந்தைகளை உயிருடன் விட்டு வைத்ததன் மூலம் ஒவ்வொரு நிமிடமும் அந்தக் குழந்தைகளை வதைத்துக் கொண்டிருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

மருந்து கொடுக்கும் பொழுது அல்லது வைத்தியம் செய்கையில் அந்த குழந்தைகள் தாய் அரவணைப்பைத் தேடி கட்டிப்பிடிப்பதாகவும் சில வேளைகளில் பற்றிப் பிடித்து மடியிலேயே உறங்கி விடுவதாகவும் இது பெரும் தர்மசங்கடமான நிலையை தாதிமாருக்கு ஏற்படுத்தி விடுகின்றதாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**நாட்டினைக் காக்க காட்டினை வளர்ப்போம்**

## வரி விளம்பரம்

### பெற்றுக்கொள்ளவும்

12 - 08 - 92 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் சொக்குவில் கோவில் வீதியில் தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு உடுவில்தெற்குசித்தி விநாயக ஆலய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப்பெறவும். (3029)

### தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும் உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. (3037)

### புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை (ஆண்டு 5)

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை18-08-92 செவ்வாய் மு.ப. 7-00, பி.ப. 1.00 மணி நேரங்களில் நடைபெறும். வெளிமாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.- (3031)

### புத்தக கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ஸ்ரீகாந் புத்தகசாலைநல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### விண்ணில் அல்ல விடிவெள்ளி

மீரா வெளியீடு ''கிளிநொச்சிப் பிரதேசத்தின் சாதாரண விவசாய குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை போர்க்காலப் பின்னணியில்'' எழுதியிருக்கிறார் பிரபல எழுத்தாளர் ''தாமரைச் செல்வி'' விற்பனையாகிறது பிக்பென்ஸ்(B) புத்தகசாலை கிளிநொச்சி. (3038)

### உலகப்படம்

Latest map of world, Latest Map of Sri Lanka இரண்டும் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4909)

### புத்தக கண்காட்சியும்


# புலிகள் இல்லாவிட்டால் எமக்கு உதைதான் விழும்

## குமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

புலிகள் அரசுடன் மோதிக் கொண்டு இருப்பதனால்தான் இனப்பிரச்சினை ஒன்று இருப்பதாக அரசு உணர்கின்றது. அதுவும் இல்லாவிட்டால் எங்களைத்தூக்கி எறிந்துவிடுவார்கள். அப்படித் தூக்கி எறிவதற்கு, எங்கள் மத்தியிலுள்ள ஒரு சில கேவலமான தமிழர்களும் கூட ஒத்தாசையாக உள்ளனர். மேற்கண்டவாறு தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. குமார்பொன்னம்பலம் அண்மையில் கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வடிப்படையில் புலிகள் ஒரு முக்கியமான வேலையைச் செய்துகொண்டு இருக்கின்றார்கள் என்று நான் கூறுகின்றேன். இதனை நான் மாத்திரமல்ல வேறுசில குழுக்களும் ஏற்கின்றன. ஆனால் நேரடியாகக் கூற அவர்களுக்கு நா கூசுகிறது. அதற்கு நான் என்ன செய்யமுடியும்? புலிகளை ஒழித்தால், எல்லோரும் எங்களை உதைப்பார்கள். முதல் உதை வேண்டுவது பிரேமதாசாவின் காலை நக்கிக்கொண்டிருக்கும் தமிழர்கள் தான். அதற்குப் பிறகு தான் நாங்கள். இந்தக்கேவலமான நிலையைப் புலிகள் தடுக்கின்றனர். எனவே புலிகளை ஒழித்தால், எமதுநிலைஅரோகராதான்,

யூன் 15 இல் ஜனாதிபதியை சந்தித்துப் பேசிய பிற்பாடு அது ஒரு கேலியான, விரக்தியான அனுபவம் என்று குறிப்பிட்டிருந்தீர்களே, ஏன்? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்,

ஏனா? நான் சொல்கிறேன் ஏன் என்று. அவர், ஜனாதிபதி என்று சொல்லப்படுபவர் எங்களுக்குச் சொல்கின்றார்; தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் இணைப்பிற்கு மாறு என்று. அதேசமயம் சொல்கின்றார்; ஆனாலும் கூட ஒற்றுமை அல்லது உடன்பாட்டை கொண்டுவர முடியுமென்றால் அதை நாங்கள் அமுல்படுத்துவோம்.

அப்படியாயின் உடன்பாடு என்றால் என்ன? அது ஒரு நிலை சம்பந்தமாக எதிர்ப்பில்லாது இருத்தல் என்பதேயாகும்.

தெரிவுக் குழுதான் அரசியல் தீர்வைக் கொண்டு வர உள்ள ஒரே அமைப்பு என்று இன்று நாம் எல்லோரும் சொல்கிறோம் ஏனெனில் வெவ்வேறு கோணங்களில் இருந்தஐ.தே.க.யும்சு.கயும்இனப்பிரச்சினை சம்பந்தமாய் கதைக்க ஒன்றாக இருக்கின்ற ஒரே அமைப்புதெரிவுக் குழுதான்,

தெரிவுக் குழுவில் 45 அங்கத்தவர்கள் உள்ளார்கள். 45 என்று வைத்துக்கொண்டாலும், அதில் பெரும்பான்மையினர் ஐ.தே.க. வினரே (அதாவது 23 பேர் ஐ.தே.க, 22 பேர் சு.க.)

இவ்வாறான இடத்தில் இருந்து உடன்பாட்டைக் கொண்டுவா என்றால் அது எவ்வாறு சாத்தியம்? 22 எதிர்க்கட்சியினரும் ஏற்றுக் கொண்டால் ஐ.தே.க. வினர் சம்மதிப்பார்களா?

மறுபுறத்தில், மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டிருக்கின்ற சு.க.வினர்கூடஐ.தே.க வினர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தாமும் வடக்குகிழக்கு இணைப்பை ஏற்கிறோம் என்று சொல்வார்களா?

இந்த நிலையில் 30, 40 வருட கால அரசியல் அனுபவம் உடைய ஜனாதிபதி அங்கே போய் உடன்பாட்டைக் கொண்டுவா என்று கூறினால், அது எங்களையெல்லாம் மடையர்கள் என்ற மாதிரி அவர் கவனித்து வைத்திருக்கிறார் என்பது தான் கருத்து ஆகும்.

அவர், தான் சொல்வதை நேர்மையாய் சொல்ல வேண்டும். தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம், வடகிழக்கு இணைப்பிற்கு இடம் கொடுக்காது என்று அவர் சொன்னால், அது வேறு விடயம்

இது என்னவென்றால் செய்யலாம் ஆனால் சத்துராதியிடம் இருந்து உடன்பாட்டைக் கொண்டு வா. என்றால் இது கேவலமானது. இது எங்களை மாத்திரம் அல்ல முழுத் தமிழினத்தையுமே கேவலமாக்கும் விடயமாகும் என குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

# விரைவில் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கணித, விஞ்ஞான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகள் மிகவிரைவில் வெளிவரவிருக்கின்றன.

மேற்படிபரீட்சையின் வினாத்தாள்களின் திருத்த வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறது. பரீட்சை முடிவுகளை நிரற்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றது. இவ்வேலை நிறைவடைந்ததும் மத்திய மாகாண அரசுகளிற்கு அறிவிக்கப்பட்டதும் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் (க)

# முறைகேடான பயன்பாடு

பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் தங்குவதற்கான நுவரெலியாவிலுள்ள ஜெனரல் ஹவுஸ் விருந்தினர் மாளிகையில் அறைகளை ஒதுக்கீடு செய்தல், அவற்றில் தங்கியிருத்தல் போன்றவற்றில் விதிமுறைகள் மீறப்படுவதாகச் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

## நூல்வெளியீடு

(குருநகர்)

அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் எழுதிய ''கீதோபதேசம்'' என்னும் கைநூல் எதிர்வரும் 21ஆம் திகதிவெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்படும்.

அளவெட்டிதெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாரயணர் தேவஸ்தானரதோற்சவத்தை முன்னிட்டு அன்றையதினம் நண்பகல் 1 மணியளவில் தேவஸ்தான மண்டபத்தில் நூல் வெளியீட்டு வைபவம் நடைபெறும். (21)

# ஆயுத விற்பனையுடனும் அவுஸ். பிரஜை தொடர்பு

(மாத்தறை)

அண்மையில் காலிப்பகுதியில் கஞ்சா, அபின் போன்ற போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்ட அவுஸ்திரேலிய பிரஜை ஆயுத விற்பனையிலும் ஈடுபட்டு வந்துள்ளார் என்றசந்தேகம்பொலிசாருக்கு எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபருக்கும் வசதி படைத்தவர்களுக்கு மிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்ததாகவும் பொலிசார் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 13 ஆண்டுகாலமாக இலங்கைக்கு வந்து போகும் இவர் தான் வசித்து வந்த வீட்டைச் சுற்றி கோட்டை போன்று பத்து அடி உயரத்திற்கு மதில் அமைத்திருந்தார் என்றும்.

இவர் அளவுக்கு அதிகமாகப் போதைப்பொருள் பாவிப்பவராகவும் இருந்து வந்துள்ளார் என்றும்,

இந்த நபர் நூறு ரூபாய் நோட்டை சிகரெட் போல் சுருட்டி அதில் போதைப் பொருள் நிரப்பி புகைப்பதுண்டாம். பொலிசார் இவரது அறையைச் சோதனையிட்ட போது எரிந்த மீதியான சிகரெட் துண்டுகளைப் போன்ற அடிக்கட்டைகளை விரித்துப்பார்த்தபோது அவை நூறு ரூபாய் நோட்டுக்களின் துண்டுகளாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# 45-ம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில் 05 – ✓1 – 1974



தாயக மண்ணில் 05 – 07 – 1992

2ஆம் லெப்ரினன்ட்

## தமிழினியன் (ஜல்சன்)

(எதிர்மன்னசிங்கம் ஆனந்தவேல்)

அஞ்சுதலின்றியே ஆயுதமேந்திய
ஆனந்தவேலே! உன்
இனிய திருமுகம் காண்பதெப்போ?
ஈரொன்பது ஆண்டுகளில் உன்
உடலும் மண்ணுக்காய் ஆனதையா வானத்து
ஊர்த்தியது சிதறிய அந்நாள்போல்—மேலும்
எத்தனை சாதனைகள். எதிர்காலத்து
ஏடுகள் கூறுமையா உன் புல்லாவெளி
வரலாற்றுப் பாடமதை—காவிய
நாயகனுனை கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்.

இம் மாவீரனது இறுதிக்கிரியைகளிற்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும் மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன், இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் வடக்கு,
கண்ணகையம்மன் கோவிலடி,
சுழிபுரம்.

— குடும்பத்தினர்

(3028)

# லெப். கேணல் டேவிட் வீடமைப்பு திட்டத்தில் மாவீரர் நினைவு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை இடம் பெயர்ந்த மக்களால் கடந்த சனிக்கிழமைமாவீரர் நினைவஞ்சலிக் கூட்டம்நடாத்தப்பட்டது.

லெப்டினன்ட் கேணல் டேவிட், லெப்டினன்ட் கேணல் சூட்டி, கப்டன் நேமி, வீரவேங்கை சுகந்தன் ஆகிய நான்கு மாவீரர்கள் நினைவாக லெப். கேணல் டேவிட் வீடமைப்புத் திட்டத்தில் நடாத்தப்பட்ட இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

இந் நினைவஞ்சலி நிகழ்ச்சியை முன்னிட்டு சனி காலை சுகந்தன் விளையாட்டு மைதானத்தில் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி இடம் பெற்றது.

இப்போட்டியில் சுகந்தன் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும் லெப். கேணல் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த ஜெகன் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

# மாணவர்கள் பங்கெடுக்கும் மரநடுகைத் திட்டம்

கடும் வரட்சி இயற்கை அனர்த்தங்கள், போர்க்கால சூழ்நிலைகள் ஆகியவற்றினால் மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டதனை அடுத்து மரநடுகைத்திட்டத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாணவர்களும் பாடசாலைகளும் பங்குபற்றும் திட்டத்தின் கீழ் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலைகளும், மாணவர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# எழுதுவினைஞர் பதவிக்கு 9000 பேர் விண்ணப்பம்

எழுது வினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு சுமார் 9000 விண்ணப்பங்கள் யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 11-ம் திகதி 5672 விண்ணப்பங்கள் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மீதமான 3003 விண்ணப்பங்களும் இங்கிருந்துசெல்லவிருக்கும் குமண கப்பல் மூலம் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. (42)

## சிரமதானம்

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் பல வருட காலமாக அடைக்கப்படாதிருந்த சுற்றுப்புற வேலிகளை அண்மையில் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களால் சிரமதானம் மூலம் அடைக்கப்பட்டது. (42)

# யாழ் / பல்கலைக்கழகம்

## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

செங்கை ஆழியானின் ''6'' நாவல்களின் தொகுப்பு '550' பக்கங்கள் ரூபா 150/- விற்பனையாகின்றது ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். மக்மில்லன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4910)

## தவறிவிட்டது

செல்வி பஞ்சுளா நடராசாவின் தேசிய அடையாள அட்டை யாழ் பல்கலைக்கழக வளவினுள்ளோ அணித்தாகவோ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3042)

## பெற்றுக் கொள்ளவும்

(பருத்தித்துறை)

வீதியில் கண்டெடுக்கப்பட்ட காசோலை ஒன்று தமிழீழக் காவல்துறையினரால் வடமராட்சிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களத்தால் ''இந்துமதி'' என்னும் பெயருக்கு எழுதப்பட்ட இக்காசோலையை உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாமென வடமராட்சிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ச. செல்லத்துரை தெரிவித்துள்ளார். (25)

★ ★

நேசராஜா றொபேட் தேவராஜ் என்பவரது உலர் உணவு விநியோக அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அவ் அட்டையைப் பெற்றுக் கொள்ளவும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாணவர்களும் பாடசாலைகளும் பங்குபற்றும் திட்டங்களை முன்வைத்துள்ளது.

பாடசாலை மாணவர்களை பொது இடங்களிலும் வீதியோரங்களிலும் மரநடுகையை மேற் கொள்ளும் திட்டத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு மரநடுகைச் செலவினம் உட்பட பல கவர்ச்சிகரமான பரிசுகளைவழங்க முன்வந்துள்ளது. இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் தொகை 1000 ஆகவும் இத்திட்டத்தில் கலந்து கொள்வோர் 6 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் ஆண்டுவரை யானவர்களாக இருக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்கும் முறையே 5,000 ரூபாய், 2500 ரூபாய், 1,250 ரூபாய் என பரிசுத்தொகையும் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்கும் முறையே 10,000 ரூபாய், 5,000 ரூபாய், 2.500 ரூபாய் எனவும்பரிசுத்தொகை வழங்கப்பட உள்ளது.

இதைவிட சுயமாக தாமாகவே முன்வந்து பொது இடங்களிலோ வீதியோரங்களிலோ மரநடுகை செய்யும் மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

இது போன்று மாணவர்கள் மத்தியில் மரநடுகையை ஊக்குவிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கும் பாடசாலைகளுக்குகோட்டமட்டத்தில் பரிசு பெறும் முதல் மூன்று பாடசாலைகளுக்கும் முறையே 10,000 ரூபாய், 5,000 ரூபாய், 2,500 ரூபாய் வீதமும் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பாடசாலைகளுக்கு முறையே 50,000 ரூபாய், 30,000 ரூபாய், 15,000 ரூபாய் வழங்கப்பட உள்ளன.

இம்மரநடுகைத் திட்டத்

---

### யாழ் / பல்கலைக்கழகம்

# மகாபொல கொடுப்பனவு 8ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

**முதலாம் வருடம்**

மருத்துவ பீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
பௌதிக விஞ்ஞானப் பிரிவு

18 - 08 - 92 9.00 - 12.00 மு. ப.
20 - 08 - 92 9.00 - 12.00 மு. ப.
24 - 08 - 92 9.00 - 12.00 மு. ப.

**இரண்டாம் வருடம்**

மருத்துவ பீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
பௌதிக விஞ்ஞானப் பிரிவு

18 - 08 - 92 1.30 - 3.00 பி. ப.
20 - 08 - 92 1.30 - 3.00 பி. ப.
24 - 08 - 92 1.30 - 3.00 பி. ப.

**மூன்றாம் வருடம்**

கலைப்பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு
மருத்துவ பீடம்
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
பௌதிக விஞ்ஞானப் பிரிவு

19 - 08 - 92 9.00 - 12.00 மு. ப.
21 - 08 - 92 9.00 - 12.00 மு. ப.
27 - 08 - 92 9.00 - 12.00 மு. ப.

**நான்காம் வருடம்**

கலைப் பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு
மருத்துவ பீடம் (4ஆம், 5ஆம்வருடங்கள்)
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
பௌதிக விஞ்ஞானப் பிரிவு

19 - 08 - 92 1.30 - 3.00 பி. ப.
21 - 08 - 92 1.30 - 3.00 பி. ப.
27 - 08 - 92 1.30 - 3.00 பி. ப.

1ஆம், 2ஆம் வருட விவசாயபீட மாணவர்களுக்கான மேற்படி கொடுப்பனவு விவசாய பீடத்தில் கொடுக்கப்படும்.

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

(சி/4811) —பதிவாளர்

---

# நினைவு கூருகின்றோம்...

## 1992 - 08 - 18

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை தம்பலகமம் - 98ஆம் கிராமம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். அருள்** (சபாரட்ணம் சந்திரராஜா - 13ஆம் கட்டை, தம்பலகமம், திருக்கோணமலை)

புதுக்குடியிருப்பில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கணேஸ்/சிறி**

யாழ்-நல்லூர்ப் பகுதியில், இந்திய மத்திய ரிசேவ்ப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட இறுதி ஆண்டு மாணவன், யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் உட்பட 3 - தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மதுரங்குளத்தில் இந்தியப்படையினர் மற்றும், தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட -

**கப்டன் தரன்** (வேல்முருகு தவராசா - புலி பாய்ந்த கல், கிரான், மட்டக்களப்பு)

கிளிநொச்சி, ஐயன்குளம் பகுதியில் விறகுவெட்டச் சென்றபோது, இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் உட்பட 2-தமிழர்கள்.

சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் வலிப்பு நோய் காரணமாக இரவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு படுகையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்.

1990ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மூப்பனார்** (முத்துலிங்கம் பிரியதர்சன் - கந்தையா வீதி, சாவகச்சேரி)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பு, மன்ரேசாப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சுசியன்** (சுப்பிரமணியம் செல்வகுமார் - ஊறணி, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4907]

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்,
ஒரு குழல் வாத்தியம் வாசித்தனர்,
இராணுவ உடுப்பை எனக்கு உடுத்தினர்,
பின்னர், என்னைக் கொன்றனர்.

— இர்வின் ஷா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அமைச்சரின் வெறியூட்டும் முயற்சி

"விடுதலைப் புலிகளை திட்டமிட்ட ரீதியில் ஒழித்துக்கட்ட புதிய தளபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, பிரிகேடியர் றோகான்தலுவத்த ஆகியோருக்குபூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்" என பலாலி இராணுவ - விமானப்படைத்தளத்தில் பேசிய அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். மேலும் "வடக்கு - கிழக்குப் போரில் வெற்றிவாகை சூட வேண்டும் இதுவே ஊர்காவற்றுறையில் மரணமடைந்த இராணுவத்தினருக்குச் செலுத்தும் கௌரவம் ஆகும்" எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவின் பலாலி விஜயமும், படையினர் மத்தியில் அவர் பேசிய பேச்சும் இராணுவத்தினருக்கு தெம்பூட்டவும், அதன் மூலம் இராணுவத்தினருக்கு போர் வெறியை ஊட்டுவதும் நோக்கமாகக் கொண்டதாகும். அதாவது சிறிலங்கா இராணுவத்தினருக்கு போர் வெறி ஊட்டவேண்டிய அவசியம் அமைச்சருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதகாலத்தில் வடக்கு-கிழக்கு போர் முனையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்புக்கள் இராணுவ வெற்றி குறித்துபெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது அரசியல்விமர்சகர்கள் அனைவரையும் சிறிலங்கா இராணுவம் இதுவரை ஈட்டியதாகக் கூறிய வெற்றிகள் குறித்துக் கேள்வி எழுப்பினர். இதனை உறுதிப்படுத்துமாப் போல் இருந்தது ஊர்காவற்றுறையில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னா, ரியல் அட்மிரல் ஜெயமான உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் புலிகளின் தாக்குதலுக்குப் பலியானது.

இதேவேளை, புலிகளின் தொடர்ச்சியான அதிரடித்தாக்குதலுக்கு இலக்காகிய இராணுவத்தினர் மனோதிடம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இது குறித்து இராணுவத்தரப்பிலேயே பிரஸ்தாபிக்கப்பட்டுவந்ததை கொழும்பிலிருந்து கிடைத்த பத்திரிகைச் செய்திகளே ஊர்ஜிதப்படுத்

# செக்கோஸ்லவாக்கியா: சமாதான விவாகரத்து

லோறன்ஸ் திலகர்

"இன்றைய உலகில் மனிதனுக்குத் தேவையாக இருப்பது தேசிய அரசே". கடந்த மாதம் சுவிற்சலாந்து நகரமான பாசலில் கிழக்கு, மேற்கு ஆய்வு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாடு ஒன்றில் முன்னாள் யூகோஸ்லாவியாவில் உருவான ஸ்லோவேனியா எனும் புதிய நாட்டின் ஜனாதிபதி மிலான் இச்சன் இவ்வாறு முழங்கிய போது கரகோஷம் வானைப் பிளந்தது. 19 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் ஐரோப்பிய தேசிய அரசுகள் (Nation states) தோன்றின. இவை நடைமுறையில் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் அரசுகளாகவே இருந்தன. மொழி, இன, மத அடிப்படையில் உருவான தனித் தேசிய இனங்களின் அரசுகளாக இருந்ததில்லை தற்போதுதான் அத்தகைய நிகழ்வுகள் நடக்கின்றன. கிழக்கு ஐரோப்பாவில் தனித் தேசிய இனங்கள் தமக்கென நாடுகளை உருவாக்கிக் கொண்டிருப்பது புதியதொரு பரிமாணமாகக் காணப்படுகின்றது.

அதேவேளை, கூட்டுப் பொருளாதார நலன்கள், திறந்த சந்தைப் பொருளாதாரம் ஆகியவை தேசிய எல்லைகளைக் கடந்து பல நாடுகளை உள்ளடக்கும் தன்மை வாய்ந்ததாகவும், பரந்த தேசியம் (Transnationalism) அல்லது உயர் தேசியம் (Supranationalism) என்ற விரிவுபட்ட தேசியத்தைக் கொண்டு வருவதாகவும் அமைகின்றன. தனித் தேசிய இனங்கள் தமக்கென நாடமைக்கும் நிகழ்வுகளுக்கும், விரிவுபட்ட தேசியத்தை அமைக்கும் முயற்சிக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்விரண்டு நிகழ்வுகளுக்கும், அதன் முரண்பாடுகளுக்கும் தளமாக ஐரோப்பாக் கண்டம் சிறந்த உதாரணமாக விளங்குகின்றது. ஐரோப்பிய சமூகத்தின் ஒருங்கிணைப்புக்கு எதிராக டென்மார்க் மக்கள் வாக்களித்தமையும், செக்கோஸ்லவாக்கியா என்ற நாட்டிலிருந்து ஸ்லாவியக் குடியரசு பிரிந்து போவதற்கு ஸ்லாவிய மக்கள் வாக்களித்தமையும் அண்மைக்கால இரண்டு உதாரணங்களாகக் கொள்ளலாம். இவை இரண்டும் ஒரு மக்களின் தேசிய நிர்ணய உரிமையின் அடிப்படையில்




ஜனநாயக வாக்களிப்பின் மூலம் நிகழ்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது கடந்த வருடம் நெதர்லாந்திலுள்ள மாஸ்ரிட் (Maastricht) நகரில் நடைபெற்ற ஐரோப்பிய சமூக நாடுகளின் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அங்கீகரிக்க டென்மார்க் மக்கள் மறுத்துள்ளனர். வாக்களித்த டென்மார்க் மக்களின் 50.3 வீதமானோர் ஐரோப்பிய சமூக இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந் நூற்றாண்டு முடிவுக்குள் ஐரோப்பிய சமூக நாடுகளிடையே பொருளாதார நிதிய இணைப்பை (Mone tary Union) ஏற்படுத்துதலே மாஸ்ரிட் தீர்மானமாகும். பின்னர் அதனை இராணுவபாதுகாப்பு இணைப்பாகவும் (Defience Union) ஐரோப்பிய சமஷ்டியாகவும் (Eurofedera Lism) வளர்த்துச் செல்வதே ஐரோப்பிய சமூக நாடுகளில் பெரும்பாலானவற்றின் நோக்கமாக இருந்தது. ஆயினும் பலமற்ற சில சிறிய நாடுகள் தமது தேசியத்தை பாதுகாக்கவும், தமது தனித்த அடையாளத்தை நிலைநிறுத்தவும் எண்ணம் கொண்டன. மேலும் பலம் பொருந்திய தேசங்களால் தாம் சகல விதத்திலும் விழுங்கப்பட்டு விடுவோம் என்றும் பயந்தன. அப்பயத்தின் விளைவே டென்மார்க் மக்கள் ஐரோப்பிய சமஸ்டிக் கொள்கைக்கு எதிராக வாக்களித்தமையாகும். ஆயினும் டென்மார்க்கில் இன்னொரு குடியொப்பத்தை வைப்பதன் மூலம், ஐரோப்பிய சமூகத்தில் முழு நிலை அங்கத்தவராகத் தொடர்ந்திருக்கவும், மாஸ்ரிட் தீர்மானத்துக்கு ஒத்துப் போகவும் முயற்சிகள் இடம் பெற்றுவருகின்றன. அதே வேளை சுவீடன், பின்லாந்து சுவிற்சலாந்து, ஒஸ்ரியா ஆகிய நாடுகள் ஐரோப்பிய சமூகத்துள் புதிதாக இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. தற்போது 12 ஆக உள்ள அச்சமூகம் மேலும் விரிவடைந்து மிகப்பெரும் ஐரோப்பிய வல்லரசாக மாறுவதே அதன் இறுதி இலட்சியமாகஉள்ளது இப்பாதையில் மேற்கு ஐரோப்பிய யூனியன் என்ற இராணுவ அமைப்பு ஐரோப்பிய சமூகத்தின் இராணுவப் பாதுகாப்பு அமைப்பாக தனித்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வளர்ச்சி அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ (Nato) இராணுவஅமைப்புக்கு எதிர் அமைப்பாக உருவாகலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

தேசிய இனங்கள் ஓர் அரசுக்குள் புதிய அரசுகளை உருவாக்கும் போக்கில் தற்போது முக்கியத்துவம் பெறுவது செக்கோஸ்லவாக்கியாவாகும். 74 ஆண்டுகளாக செக் மக்களும், ஸ்லாவிய மக்களும் ஒரு அரசினுள்ளே வாழ்ந்துள்ளனர். செக்கோஸ்லவாக்கியா, ஜேர்மன்கிட்லரால் கைப்பற்றப்பட்டு, 1944 ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் செம்படையால் விடுவிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து சோவியத்யூனியனின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட காலங்களில் ஒரே நாடாகவே விளங்கியது. 1968 ஆம் ஆண்டு சோவியத்தின் ஆதிக்கத்திற்கெதிரா செக்கோஸ்லவாக்கிய மக்கள் தலைநகரான பிளக்கில் கிளர்ந்தபோது (Prague Spring) அதற்குத் தலைமை தாங்கியவர் ஒரு ஸ்லாவியரே. அவர்தான் டியுப்செக் என்பவர் பின்னர் சோவியத்யூனியன் சிதறுண்ட போது அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட செக்கோஸ்லவாக்கியா தற்போது இரு நாடுகளாக பிரியும் தறுவாயில் உள்ளது.

சமஸ்டி ஆட்சி முறையைக் கொண்ட செக்கோஸ்லவாக்கியாவில் அண்மையில் செக்ஸ்லாவியா ஆகிய சமஸ்டிக் குடியரசுகளின் பாராளுமன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்ற போது ஸ்லாவியக் குடியரசில் பிரிவினையையும் தனி நாட்டையும் வலியுறுத்திய கட்சிகளே வெற்றி பெற்றுள்ளன.

(தொடரும்)

# ஐ.நா. தீர்மானத்தை ஏற்காவிடில் ஈராக் மீது ராணுவ நடவடிக்கை

## - ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஐ நா. சபைத் தீர்மானத்தை ஏற்று பாக்தாத் அதற்கேற்ப செயற்படாவிட்டால் ஈராக்கிற்கு எதிரான இராணுவ நடவடிக்கை எந்தவொரு தருணத்திலும் மேற்கொள்ளப்படலாம் என அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டம் ஒன்றில் பேசிய ஜோர்ஜ் புஷ் நியூயோர்க் டைம்ஸில் வெளியான செய்தியொன்றைப் பற்றியும் குறிப்பிட்டார்.

நியூயோர்க் டைம்ஸில் "குடியரசுக் கட்சி மாநாட்டின் தொடக்கத்திற்கு முன்பதாக பாக்தாத்துடன் வாஷிங்டன் சண்டை ஒன்றை தூண்டிவிட்டு வருகிறது" என்ற தகவல் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் இதனை மறுத்த ஜோர்ஜ் புஷ் ஒரு அரசியல் நோக்கத்திற்காக அமெரிக்கா சண்டை ஒன்றை துவக்கும் என்பதான எண்ணத்தையே புறக்கணித்தார்.

ஆனால் ஐ. நா. சபையின் போர் நிறுத்த நிபந்தனை

# இந்தியப் பிரதமர் ராவிற்கு பாகிஸ்தான் அழைப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அந்நாட்டுப்பிரதமர் நவாப் ஷெரீப் அழைப்பு விடுத்துள்ளார்.

சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ஷெரீப் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த யூனில் ரியோடிஜெனிரோவில் பூமிசம்பந்தமான மாநாட்டில் ராவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த பாகிஸ்தானிய பிரதமர் ஷெரீப்பும் கடந்த பதினெட்டு மாதங்களில் வெளிநாடுகளில் நான்கு தடவைகள் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இந்தியாவும் பாகிஸ்தானும் 1947 ஆம் ஆண்டிலிருந்து 3 யுத்தங்களை சந்தித்துவிட்ட நிலையில் காஷ்மீர் கிளர்ச்சியாளருக்கு பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கி வருவதாக இந்தியா குற்றம்சாட்டி வருகிறது.

1989ஆம் ஆண்டு கடைசியாக பாகிஸ்தானுக்கு விஜயம்

தாபிக்கப்பட்டுவந்ததை கொழும்பிலிருந்து கிடைத்த பத்திரிகைச் செய்திகளே ஊர்ஜிதப்படுத்தின. அத்தோடு, ஆயுதப்படையைச் சேர்ந்த 7000 பேர் கடமையில் இருந்து ஓடியமையே இதனை நிரூபிப்பதாக இருந்தது. அத்தோடு, உயர் அதிகாரிகளின் மரணம் இராணுவத்தினரின் மனோதிடத்தைப்பாதிக்கவில்லை என இராணுவத் தரப்பினர் தொடர்ந்து அறிக்கை விடுவதிலிருந்தே அதிகாரிகளின் இழப்பு இராணுவத்தினரை உளவியல் ரீதியாக எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தியது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்நிலையில், தான் அமைச்சர்ரணில் நேரடியாக பலாலி விமானப்படைத்தளம் வந்து இராணுவத்தினருக்கு தெம்பும் போர் வெறியும் ஊட்டவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் இராணுவத்தினரின் உணர்ச்சிகளைக் கிளறும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது. இராணுவ வெற்றி என்பது ஊர்காவற்றுறையில் பலியான தளபதிகளுக்குச் செலுத்தும் கௌரவம் என்பது ஓர் உணர்ச்சிபூர்வமான விடயமாகும். அதாவது இராணுவத்தினரின் உணர்ச்சியைக் கிளறிவிட்டு தனது தேவையை அரசாங்கம் நிறைவேற்றப் பார்க்கிறது.

அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எட்ட முடியாது என்பதும், விடுதலைப்புலிகளுடனான போரில் வெற்றிபெற முடியாது என்பதும் தற்பொழுது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. இருப்பினும், சிறிலங்கா அரசாங்கத்திற்கு இன்று இராணுவ வெற்றி அவசியமாகவுள்ளது. இதனால், இராணுவத்திற்கு உற்சாகம் ஊட்டி உந்தித்தள்ள வேண்டிய அவசியம் அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால், பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற அமைச்சரின் அறிவிப்பில் புதிதாக எதுவுமில்லை. அரசாங்கம் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே இராணுவத்திற்கு தனது பூர்ண ஒத்துழைப்பை வழங்கியே வருகிறது. பல நெருக்கடியின் மத்தியிலும் இவ்வருடத்தில் சுமார் 2000 கோடி ரூபாவிற்குமேல் இராணுவச் செலவீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதைவிட போருக்கான ஒத்துழைப்பாக ஜனாதிபதியும், அமைச்சர்களும் களத்தில் நின்று உயிரையா விடப்போகின்றார்கள்.

---

புஷ் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ... டின் தொடக்கத்திற்கு முன்பதாக பாக்தாத்துடன்

## அமெ நிபந்தனைகளை ஈராக் ஏற்றுக்கொள்ளாது

### ஈராக் அறிவிப்பு

(நியுயோர்க்)

''ஐ. நா. சபையின் பரிசோதகர் விடயத்தில் அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு அல்ல, ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அறிவுறுத்தல்களுக்கே ஈராக் பணிந்து நடக்கும்''.

இவ்வாறு ஐ, நா. சபைக்கான ஈராக்கிய தூதுவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்கா இராணுவ பலத்தைபிரயோகிக்கப் போவதாக மிரட்டுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## 70 இராணுவ தளங்களை மூடிவிட அமெரிக்கா திட்டம்

அமெரிக்கா 70 இராணுவ தளங்களை மூடிவிடத் திட்டமிட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

இதில் 69 இராணுவ தளங்கள் ஐரோப்பாவிலும், ஒரு இராணுவ தளம் தென்கொரியாவிலும் அமைந்துள்ளன எனவும் பாதுகாப்புத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில்ஜேர்மனியில் 28தளங்களும், பிரித்தானியாவில் 9 தளங்களும், இத்தாலியில் 6 தளங்களும், துருக்கியில் 6 தளங்களும், பெல்ஜியம், நெதர்லாந்து, தென்கொரியா ஆகிய இடங்களில் ஒவ்வொரு தளங்களும் அமைந்துள்ளன.

## சோமாலியாமக்களுக்கு அவசர உணவு விநியோகம்

(வாஷிங்டன்)

பட்டினியில் வாடும் சோமாலியா மக்களுக்கு அவசர உணவு விநியோகத்தை விமானங்கள் மூலமாக அனுப்பி வைப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் உணவு விநியோகத்தினை கண்காணிப்பதற்கென ஐநூறு ஐ.நா. துருப்புக்களை அனுப்பி வைப்பதற்கு அமெரிக்க அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது

ஏற்கனவே ஏழு கோடியே எழுபதுஇலட்சம்டொலர்பெறுமதியான உணவுப் பொருட்கள் அமெரிக்க அரசினால்அனுப்பிவைக்கப்பட்ட நிலையில், மேலும் ஒரு லட்சத்து நாற்பத்தையாயிரம் தொன் உணவுப் பொருட்கள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

சோமாலியாவில் பட்டினி காரணமாக நாற்பத்தைந்து இலட்சம் மக்கள் மரணத்தை எதிர்நோக்கியுள்ளனர். சுமார் எழுபது இலட்சம் மக்கள் இங்கு அகதியாகவும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சோமாலியாவில் பட்டினியால் வாடுவோருக்கு உதவுமாறு அமெரிக்க அரசாங்கம் கென்யாவையும் கேட்டுள்ளது.

---

ஆனால் ஐ. நா. சபையின் போர் நிறுத்த நிபந்தனைகளை ஈராக் ஏற்காவிடில் அந்த நாட்டிற்கு எதிராய் தான் நடவடிக்கைகளை மேற்கொள்வதை அரசியல் நெருக்குதல் மூலமாக தடுத்து நிறுத்திட முடியாது என்றும் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

## பி.எல்.ஒ. நிபந்தனை

(ரியூனிஸ்)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் யூதர் குடியேற்றம் பற்றி அமெரிக்கா தனது நிலையைப் பகிரங்கமாக தெரியப் படுத்தினால் தான் வாஷிங்டனில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள முடியும் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி. எல். ஒ. ) கூறியுள்ளது.

---

அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் பிரதமர் நவாப் ஷெரீப் மேலும் தெரிவித்தார்

இந்தியப்பிரதமர் ராவும் 1989ஆம் ஆண்டு கடைசியாக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தவர் மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆப்கானில்

## வெளியார் தலையீடு கூடாது இந்தியா கோரிக்கை

(டில்லி)

ஆப்கானிஸ்தானில் எந்தவொரு வெளிநாடுகளும் தலையீடு செய்யக் கூடாது. தற்போது அங்கு தொடரும் மோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு போட்டிக் குழுக்கள் பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும் என இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானிய மக்கள் வெளிநாடுகளின் தலையீடின்றி தமது வேறுபாடுகளை மறந்து இணக்கமான ஒரு முடிவுக்கு வருவார்களென இந்தியா நம்புவதாகவும், தற்போது ஆப்கானில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை அடைந்திருப்பதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

போட்டிக் குழுவான ஹெஸ்பி இஸ்லாமி குழுவினர் கடந்த சில தினங்களில் காபூலில் நடத்திய தாக்குதலில் இதுவரை நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## 51/2 மாத அதிசயக்குழந்தை; பிறக்கும் போது 15 அவுன்ஸ்

(வாஷிங்டன்)

புளொரிடா நகரின் மருத்துவமனையில் அதிசயக் குழந்தையொன்று அதாவது ஐந்தரை மாதக்குழந்தையொன்று 15 அவுன்ஸ் எடையில் பிறந்தும் தற்சமயம் உயிர் வாழ்கிறது.

இக்குழந்தையின் இருதயம் ஒரு ஒலிவ் மரத்தின் காயளவு சிறிதாக இருந்தது. நுரையீரல்கள் வளர்ச்சியற்று இருந்தன. உடல் சூட்டைத் தாங்க முடியாத மென்மையான சருமத்துடன் இக்குழந்தை பிறந்தது. தொடைகள், வளர்ந்த ஒருவரது சின்ன விரலின் பருமனாக இருந்தன. மயாமி ஆஸ்பத்திரியில் இக்குழந்தையை கண்ணும் கருத்துமாக பேணியதால் அக்குழந்தை உயிர் பிழைத்துக் கொண்டது

ஷாஸ்சா என அழைக்கப்படும் இக்குழந்தையை டாக்டர்கள் இது ஓர் அதிசயக்குழந்தையென்று கருதி அவ்வாறே அழைத்தனர். இக்குழந்தையை ஐந்துமாத காலம்பிழைக்க டாக்டர்கள் எடுத்த முயற்சிகள் இப்போது வெற்றியளித்துள்ளன. இருதயசத்திர சிகிச்சை நுரையீரல் தாக்கம் என்பவற்றில் இருந்து தப்பி ஆறு இறாத்தல் எடையுடன் வீடு திரும்பியுள்ளது.

1983ஆம் ஆண்டு சந்தியாகோ ஆஸ்பத்திரியில் 22 வாரங்கள் மட்டுமே கருவில் இருந்து விட்டு பிறந்த அக்குழந்தை மிகச்சிறிய குழந்தையாக அன்று சாதனைநிலை நாட்டியது.

ஆனால் குறுகிய காலத்துக்கு பிராண வாயு அடங்கிய கண்ணாடிப் பேழையில்தான் அவள் வாழ வேண்டும் என்பது டாக்டர்களின் நிபந்தனையாகும்.

---

## படகு கவிழ்ந்து 40 பேர் பலி

(டாக்கா)

வங்க தேசத்தில்படகுஒன்று கவிழ்ந்ததில் ஆகக்குறைந்தது நாற்பது பேர் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. எட்டுப் பேருடைய சடலம் உடனடியாக மீட்கப்பட்டது மேலும் 32பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றின் காரணமாக படகு கவிழ்ந்ததாகவும் மீட்புப் பணிவேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# சம்பளதிட்டம் அமுலாகாவிடில் ஆசிரியர் தினம் பகிஷ்கரிப்பு

## ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர்களின் சம்பள மீளாய்வுக்காக நியமிக்கப் பட்டகல்வி அமைச்சு அதிகாரி களைக் கொண்ட சம்பள மீளாய்வுக் குழு சிபார்சு செய்த சம்பளத்திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்துவ தென அரசு அறிவிக்கும்வரை சர்வதேச ஆசிரிய தினம் தொடர்பாக அமைச்சு நடத் தும் அனைத்துக் கூட்டங்க ளையும் சகல ஆசிரியர் சங்கங் களும் பகிஷ்கரிப்பதென ஏக மனதாக முடிவு செய்துள்ள தாக இலங்கைத் தமிழர் ஆசி ரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி சகல ஆசிரியர் சங்கப் பிரதிநிதிக ளையும் கல்வி அமைச்சுக்கு கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு.ஏ.ரி. அலஸ் அழைத்திருந்தார். இக் கூட் டத்தில் பிரதிக் கல்விப் பணிப் பாளர் நாயகம் திரு. ரூபசிங் காவும் கலந்து கொண்டார்.

கூட்ட ஆரம்பத்தில் எதிர் வரும் ஒக்டோபர் 6 ஆம் திகதி சர்வதேச சுதந்திர ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை எவ்வாறு கொண்டாடுவது என்பது தொடர்பாகக் கலந் துரையாட அமைச்சுச் செய லாளர் முற்பட்டபோது ஆசி ரியர் சங்கப் பிரதிநிதிகள் ஏகோபித்த குரலில் சிபார்சு செய்யப்பட்ட சம்பளத்திட் டத்தை அமுல் செய்வது தொடர்பாக அமைச்சு போதிய அக்கறை காட்டவில்லை யென்றும் இது தொடர்பாக அரசு இறுதி முடிவெடுத்து அறிவிக்கும் வரை இக் கலந்து ரையாடலை ஒத்திவைக்குமா றும் வலியுறுத்தினார்கள்.

இக் கூட்டத்தில் உரையாற் றிய இலங்கை சுதந்திர ஆசி ரியர் சங்கத்தின் தலைவர் திரு மென்டிஸ் வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் இரு நாட்களுக்கு செய்யும் செலவி னத்தை சேமித்தால் ஆசிரியர் களுக்கு விதந்துரைக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை சங்கத்தின் பொதுச் செயலா ளர் த மகாசிவம் அமைச்சின் அதிகாரிகள் இவ் விடயத்தை கல்வி அமைச்சரான ஜனாதி பதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து பரிகாரம் காணுமாறு ஜூலை மாதம் நடந்த கூட்டத்தில் ஆசிரியர் சங்கங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சின் அதிகாரிகள் கவனத்திற்கு எடுத்து நடைமுறைப்படுத்தா தமையை வன்மையாகக் கண் டித்து உரையாற்றியதுடன் மேலும் தாமதமின்றி உடனே ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்து ஆசிரியர்களுக் கான அர்த்தமுள்ள உண்மை யான சம்பளத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என் றும் வலியுறுத்தினார்.

இக் கோரிக்கைகளை ஏனைய சங்கங்களும் ஏகோ பித்து வலியுறுத்தியமையை அடுத்து சர்வதேச ஆசிரியர் தினம் தொடர்பாக எந்தவி தமான கலந்துரையாடலும் இடம் பெறாது கூட்டம் ஒத் திவைக்கப்பட்டது.

# தரம் 2 அதிபர்களுக்கான பரீட்சை முடிவுகள்

அதிபர் தரம் இரண்டிற் கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின்பெயர் ப்பட்டியல்வெளியாகியுள்ளது நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப் பெறுபவர்கள் வர்த்தக மானி அறிவித்தலின் படியான தகைமைகளைக் கொண்டவர் களாக காணப்பட்டால் அவர் களுக்கு பதவி உயர்வு வழங் கப்படும் எனவும், நேர் முகப் பரீட்சைக்கு எவ்வித புள்ளி களும் வழங்கப்படமாட்டாது எனவும், தமிழர் ஆசிரியர் சங் கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப் படையில் தேர்வு செய்வதற் காக தீர்மானிக்கப்பட்டிருக் கும் வெட்டுப் புள்ளிகளின் விபரங்கள் இனரீதியாக பின் வருமாறு அமைந்துள்ளன. சிங்களவர் - 175, இலங்கைத் தமிழர் - 163, இஸ்லாமியர்- 163, இந்தியத் தமிழர் - 134, பிறஇனத்தவர் - 122 ஆகும்.

இப்போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப் பாண மாவட்டத்தைச் சேர் ந்த ஆசிரியர்களின் விபரம் வருமாறு: (வவுனியா, மன் னார், முல்லைத்தீவு மாவட் டங்களைச் சேர்ந்த ஆசிரியர் களின் விபரம் நாளை அறிவிக் எங்கரசு (புத்தூர் சிறிசோமஸ் கந்த கல்லூரி), குணராசா (யாழ். இந்துக் கல்லூரி), ஆனந்தேஸ்வரன் (உடுப்பிட்டி அ. மி. த.), ஜெபரட்ணம் (உயரப்புலம் ஆனைக் கோட்டை), டசுபதி (மானிப் பாய் இந்து மகளிர் கல்லூரி), இரகுபதி (ஏழாலை சிறிமுந கன்), சண்முகராசா (யாழ். இந்து), அருணகிரிநாதன் (நாரந்தனை கணேசா வித்தி யாலயம்), போகசிங்கம் (வாத ரவத்தை விக்னேஸ்வரா), கணேசலிங்கம் (சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்), நடேசமூர்த்தி (யாழ் கல்வித் திணைக்களம்), கனகரட்ணம் (பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்), அமல தாஸ் (உசன் இராமநாதன் வித்தியாலயம்), மகேந்திரன் (தொண்டமானாறுவீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம்), வாமதேவன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), பால சிங்கம் (திருநெல்வேலி முத்துத் தம்பி), வரதராஜசர்மா (கர ணவாய் மகாவித்தியாலயம்), சிவசிதம்பரம் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சோதி லிங்கம் (யாழ் இந்துக் கல் லூரி), இராதாகிருஸ்ணன் (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கவித்தியாசாலை), பேரம்பலம் (மானிப்பாய் இந்து

## 15 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு கனத்தை மயா னத்தில் கடந்தவாரம் நடை பெற்ற லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜென ரல்விஜய விமலரத்ன ஆகி யோரின் இறுதிக்கிரியைகளின் போது குழப்பம் விளைவித் தார்கள் என்ற குற்றச் சாட் டின் பேரில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவித் துள்ளனர்

## கசிப்பு பிடிபட்டது

(சுன்னாகம்)

தமிழீழ காவல் துறையின ரால் நேற்று மாலை நான்கு மணியளவில், கோண்டாவில் அன்னங்கைப் பகுதியில் கசிப்பு பிடிக்கப்பட்டது. அப் பகுதியிலுள்ள மனோன்மணி என்பவரின் வீட்டிலேயே கசிப்பு காய்ச்சிக் கொண்டி ருந்தபோது காவல்துறையினர் முற்றுகையிட்டு பிடித்தனர். மேற்படி நபர் காவல் துறை யினரைக் கண்டதும் தப்பி ஓடி விட்டார். (11)

## வீரச்சாவு



வீரவேங்கை திருமாறன்

வவுனியா கட்டையர் குளப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரவேங்கை திருமாறன் (நடே சன் வைத்திலிங்கம் விஜய குமார் சிவன்கோவில் வடக்கு றோட், முனைத்தீவு மட்டக் களப்பு) என்ற போராளி வீரச் சாவடைந்துள்ளார்.



# மன்னார் அகதி முகாமிற்கு ஐ. நா. பிரதிநிதி விஜயம்

(மன்னார்)

தமிழ் மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ள மன்னார் தீவிற்கு வெளிநாட்டு உயர் ஸ்தானிகர் களும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்க ளும் அண்மையில் இரண்டா வது தடவையாக விஜய மொன்றை மேற்கொண்ட னர்.

மன்னார்த்தீவில் இவர்கள் அகதி முகாமிற்குச் சென்று அகதிகளை பார்வையிட்ட னர் தமிழ்மக்கள் தமது நிலை மைகளை அவர்களிடம் தெளி வாக விளக்கினர்.

மன்னார் தீவின் பல இடங் கள் பாதுகாப்பு வலையங்க ளாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாலும் தமது வீடு கள் உடைக்கப்பட்டு சூறை யாடப்பட்டுள்ளதாலும் தம் மால் சொந்த இடங்களுக்கு சென்று குடியேற முடியாதுள் ளதாகவும் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டியுள் ளதாகவும் இவர்கள் சர்வதே சப் பிரதிநிதிகளிடம் சுட்டிக் காட்டினர்.

சிறிலங்கா அரசினால் மாதாமாதம் வழங்கப்படும் உணவுப் பொருள்களைக் கொண்டு உணவு விடயத்தை ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருக்கிறது என்றும் ஆனால் ஏனையசெலவுக்கு நாங்கள்மிக வும் கஷ்டமுறுவதாகவும் அவர் கள் தெரிவித்தனர்.

தமது சொந்த இடங்களுக் குச் சென்று குடியமர்ந்து தொழில் செய்ய ஏதுவான நிலையை ஏற்படுத்தித் தரு மாறு தங்கள்சிறு செலவுகளிற் கான பணத்தைத் தருமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

# தகுதியானவர்களுக்கும் நியமனம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் மூன்று மாதங்களுக்கு முன்னர் நடந்த நேர்முகப் பரீட்சையில் நியமனத்திற்கு தகுதியானவர்கள் என தெரிவு செய்யப்பட்ட 52 தொண்டர் ஆசிரியர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை என கூறப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நிரந்தர நியமனத்திற்குரிய அங்கீகாரம் கல்விச்சேவை ஆணைக்குழுவி னால் இன்னும் வழங்கப்படா ததே இதற்குக் காரணம் என் றும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகால தெய் வீக இசையரங்கின் இன் றைய நிகழ்ச்சியில் மேரி சரோஜா ஜஸ்ரின் பாட உள் ளார் இவருக்கு பக்கவாத்திய க்கலைஞர்களாக வயலின் பாக்கியலக்ஷ்மி நடராஜா அவர்களும் மிருதங்கம் எஸ் துரைராஜா அவர்களும் பங் கேற்க உள்ளனர்.

# கப்புது கிராமத்தில் இலவச வைத்தியசாலை

(பருத்தித்துறை)

வைத்திய வசதிகள் மிகக் குறைந்த கப்புதூ கிராமத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை ''இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை'' ஒன்றைத் திறந்து வைத்துள் ளது.

கப்புதூகிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு அ. தில் லையம்பலம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழா விலே பிரதேச சபைச் செயலா ளர் திரு. சடநாதர், செவ் வந்திநாதர் இவ் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை யைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

உள்ளூராட்சித் திணைக்கள ஆயுர்வேத வைத்திய அதிகாரி டாக்டர் சி.சி.வேலும்மயிலும் நோயாளர்களுக்குச் சிகிச்சை களை வழங்கி இவ்வைத்திய சாலையின் வைத்திய சேவை களை ஆரம்பித்து வைத்தார். இத்திறப்பு விழாவிலே வட மராட்சி பிரதேசசபை தொழில் நுட்ப அதிகாரி திரு. வி. உதயகுமார், கிராமசேவை உத்தியோகத்தர் திரு க ஆன ந்தராஜா ஆகியோரும் உரை யாற்றினர். இவ்இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை யைத் திறந்து வைத்தமைக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு கப்புதூ கிராம மக்கள் நன்றியும்பாரா ட்டும் தெரிவித்துள்ளனர் (25)

# மருதங்கேணி ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குகிறது

(வடமராட்சி கிழக்கு)

மூடப்பட்டிருந்த மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்திய சாலை மீண்டும் இயங்கி வரு கின்றது,

பலவேகய II இராணுவ நடவடிக்கை காரணமாக இவ் வைத்தியசாலை மூடப்பட் டிருந்தது.

மக்கள் திரும்பவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி யதையடுத்தும், மக்களின் வேண்டுகோளை அடுத்தும் வைத்தியசாலை மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது

நாளாந்தம் பெரும் எண் ணிக்கையான நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெற்று வருகின்றார் கள்.

# லண்டன் நிறுவனத்தால் மலையகத்தில் ஆய்வு

லண்டனில் இருக்கும் எடின் பரோ கோமகன் விருது வழங் கும் நிறுவனத்தில் மக்கள் தொடர்பு பணிப்பாளராக கடமையாற்றும் செல்வி மார் க்கிரட் எட்றியன் வாலன்ஸ் என்பவர் மலையகத் தோட் டங்களுக்கு விஜயம் செய்து ஆய்வு செய்து வருகிறார். தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை முறைபற்றி இவர் மேற்கொள்ளும் ஆய்வுகளுக் காக பதுளை பசறை நுவரே லியா குதிகளிலுள்ள தோட் டங்களுக்கு நேரடியாகச் சென்று விபரங்களைச் சேக ரித்துவருகின்றார். 150 வருட காலமாக எந்த மாறுதலும் காணாத லயன்வாழ்க்கை பற் றியே இவரது ஆய்வு அமைந் துள்ளதாம்.

# நரசிம்மராவ்-ஜெயலலிதா டில்லியில் சந்திப்பு

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி நிலவரி பெறுவது பற்றியும், கிருஷ்ணா நதி நீரைச் சென்

## பெற்றுக்கொள்ளவும்

யா / மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்தில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்குரிய சுட்டிலக்

மென்டிஸ் வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் இருநாட்களுக்கு செய்யும் செலவினத்தை சேமித்தால் ஆசிரியர்களுக்கு விதந்துரைக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை அமுல் படுத்தலாம் என்பதை புள்ளிவிபரத்துடன் விளக்கினார்.

இக் கூட்டத்தில் திரு.மென்டிஸ் அவர்களின் உரையை வழிமொழிந்து பேசிய இ.த.ஆ

பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் விபரம் வருமாறு: (வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் விபரம் நாளை அறிவிக்கப்படும்)

கந்தசாமி (மானிப்பாய் இந்துக் கல்லூரி), குணநாதன் (அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை), சிறிபதி (கரவெட்டி, திரு இருதயக் வித்.)

## போராளிகள் நினைவு மலர்

போராளிகளின் நினைவு மலர்கள்,
துண்டுப் பிரசுரங்கள், வெளியிட்டோர்,
வைத்திருப்போர் எமக்கு ஆவணத்திற்கு
இரு பிரதிகளை அனுப்பியுதவவும்.

மாவீரர் படிப்பகம்
தமீழீழ விடுதலைப்புலிகள்
பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(4896)

இந்த இடம் ஞாபகம் இருக்கின்றதா?

## இதோ!
## அறிமுகப்படுத்துகின்றோம்!

முற்றிலும் புதிய பானம்
உள்ளூரில் காற்றூட்டப்பட்ட மென் பானம்
புதிய சுவை, தரம்.
சர்வதேச தரத்திற்கேற்ப
உங்கள் தணியாததாகத்தை பூர்த்திசெய்ய
உங்கள் கரத்தை வந்தடைகின்றது.

இனிமை நிறைந்த பல சுவைகளில்
நாளை விடிந்தால் தெரியும் விடை.
(இதே இடம்)

விளம்பர அமைப்பு :
செனித் ஜோ. எக்...

(3022)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சிவசிதம்பரம் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சோதிலிங்கம் (யாழ் இந்துக் கல்லூரி), இராதாகிருஸ்ணன் (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கவித்தியாசாலை), பேரம்பலம் (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி), முத்துக்குமாரசுவாமி (கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியசாலை), கந்தசுவாமி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஓங்காரமூர்த்தி (யாழ். மத்திய கல்லூரி), மகேந்திரன் (உசன் இராமநாதன் வித்தியாலயம்), சிவபாலன் (வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம்), லூயிஸ் (யாழ். கனகரட்ணம் மகா வித்தியாலயம்), காங்கேசபிள்ளை (பலாலி ஜி.ரி.எஸ்.), மகேந்திரன் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை), கலாமணி(யாழ் சென்பத்திரிசியார் கல்லூரி), கிருஸ்ணகுமார் (கொக்குவில்இந்துக் கல்லூரி.) சிவனேஸ்வரன் (சுன்னாகம் ஸ்கந்தா), நாகராஜா (மட்டுவில் சரஸ்வதி), குலசேகரம் (சாவகச்சேரி மகளிர்), பூபாலசுந்தரம் (உடுப்பிட்டி அமித க.பா.), பிரபுதேவன் (பன்னாலை சிறிகனகசபை மாகா வித்தியாலயம்), நடராஜமணி (நடேஸ்வரா), பொன்னையா (யாழ். மத்தி), விஜயநாதன் (நெல்லியடி மகாவித்தியாலயம்). நந்தகுமார் (பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி), செல்வராசா (கரவெட்டி விக்னேஸ்வரா), ரகுபதி(வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி), சிவகடாட்சம் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), சிறீஸ்கந்தராசா (யாழ். இந்து), சிவசுப்பிரமணியம் (நெல்லியடி ம.ம.வி.), சிவநாதன், ஜெயக்குமாரன் (சாவகச்சேரி மகளிர்), பாலசுப்பிரமணியம் (மீசாலைவிக்னேஸ்வரா) செல்வரட்ணம் (வல்லை சிதம்பரா

### விடைத்தாள்

பணிக்கென 4200 பேர் திரட்டப்பட்டுள்ளனர் என்றும், இவ்வேலைகள் இம்மாதம் 31ஆம் திகதி முடிவு பெறும் என்றும், கொழும்பில் 12 மத்திய நிலையங்களில் விடைத்தாள்கள் திருத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



வீரவேங்கை
ராசன்



வீரவேங்கை
வெங்கடேஸ்வரன்

ஊரியான் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் இரு விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

மேற்படி மோதலில் வீரவேங்கை ராசன் ராமநாதன் பத்மநாதன் (ரத்தினபுர-கொழும்பு - 155ஆம் கட்டை கிளிநொச்சி) வீரவேங்கை வெங்கடேஷ்வரன்(சின்னையா ராமநாதன் மாத்தளை-ஊற்றுப்புலம், முறிப்பு - கிளிநொச்சி) ஆகியோர் வீரச்சாவடைந்தவர்களாவர். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இம்மூன்று வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நரசிம்மராவ்-ஜெயலலிதா டில்லியில் சந்திப்பு

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று புதுடில்லியில் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவை டில்லியில் சந்தித்து அரை மணி நேரத்துக்கும் மேலாக உரையாடினார். இச்சந்திப்பின் போது மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், தமிழக அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி பெறுவது பற்றியும், கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவது பற்றியும் பேச்சு நடத்தப்பட்டதாகத் தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது

தமிழக முதல்வர் குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவையும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

## 5 இந்திய கடற்படையினர் தமிழக பொலிசால் கைது

(சென்னை)

புதுக்கோட்டைப் பகுதியில் இந்தியக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பெண்மணி ஒருவர் பலியான சம்பவம் தொடர்பான விசாரணையில் இந்திய கடற்படையைச் சேர்ந்த ஐவர் தமிழக காவல்துறையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்

இந்த ஐவரில் இருவர் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவராவர். இவர்கள் ஐவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது கடற்படை விசாரணைக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதேவேளை சம்பவம் நடந்தஇடத்திற்குவிரைந்தமாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை துணை ஆணையாளரும் மக்களை அமைதிகாக்கும் படியும் கேட்டுக் கொண்டனர்.

## பத்மநாபா கொலை வழக்கு நேற்று விசாரணை

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் நேற்று சென்னை தனி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். குற்றம் சாட்டப்பட்ட பதினெட்டு பேரில் முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், அவரது கணவர் ஜெகதீசன், மற்றும் வை ரவிச்சந்திரன், தமிழக அரசின் முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராசன், வழக்கறிஞர்கள் மருதநாயகம், வீரசேகரன் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இருபத்தியாறு பேரில் பதினெட்டுப் பேர் காவலில்இருப்பது தெரிந்ததே.

முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், ஜெகதீசன், ரவிச்சந்திரன், ஆகியோரும் தாக்கல் செய்துள்ள பிணை மனு இம்மாதம் இருபத்திநான்காம் திகதி விசாரணைக்கு எடுக்கப் படவுள்ளது

துள்ளதாம்.

### பெற்றுக்கொள்ளவும்

யா / மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்தில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்குரிய சுட்டிலக்கங்கள் சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயததில் வைத்து 22-08-92 காலை 9.00 - 10 00 மணிக்கு இடையில் வழங்கப்படவுள்ளன என அதிபர் தெரிவிக்கிறார். (09)

★ ★ ★

கைதடிக்கும் நாவற்குழிக்கும் இடையில் சிறுதொகைப் பணத்துடன் பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

### வர்த்தமானி பார்வையிடலாம்

மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி 28 - 08 - 1992 ஆகும்.

இவ் அறிவித்தல் வெளியாகிய 31-07-1992 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், மாதிரி விண்ணப்பப் படிவத்தையும், 442, பருத்தித்துறை வீதி நல்லூரில் இருக்கும் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைப் பணியகத்திலும், யாழ் கல்வித் திணைக்களத்திலும், பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள் வந்த, வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

17.08.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5247

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

26-3146, 26-506, 41-4893, 26-1019, 41-1665, 27-4289, 24-4560